விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 02 வெள்ளிக்கிழமை (17.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

நீண்டகாலத்துக்கு பின்

## யாழ்ப்பாணத்தில் 'மலேரியா' நோயாளி

### தென்னாபிரிக்காவிலிருந்து கடந்த வாரம் நாடு திரும்பியவர்

*(யாழ்ப்பாணம்)*

நீண்டகாலத்துக்குப் பின் யாழ்ப்பாணத்தில் "மலேரியா" நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவிலிருந்து கடந்த வாரம் நாடு திரும்பியவருக்கே மலேரியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு அனுமதிக்கப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த 27 வயது

15



தமிழ் கலாசாரத்துடன் வேட்டி அணிந்து வந்து நல்லூரானை தரிசித்த சீனத் தூதுக்குழு

கொரோனா

## 21 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்று காரணமாக மேலும் 21 மரணங்கள்

15

## 15 ஆண்டுகள் சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதி விடுதலை

### நிரபராதி எனக் கண்டறிந்த கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது

(யாழ்ப்பாணம்)

கடந்த 15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியொரு வரை நிரபராதி என கண்ட கொழும்பு

15

சீன அரசாங்கம் தொடர்ந்து

# யாழ். மக்களுக்கு உதவிகள் வழங்கும்

## இலங்கைக்கான சீனத் தூதுவர்

*(யாழ்ப்பாணம்)*

*சீன அரசாங்கம் தொடர்ந்து யாழ்ப்பாண மக்களுக்கு உதவிகளை வழங்குமென இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு வலைகள் மற்றும் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.*

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## 20ஆம் திகதி வரை வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையின்

15

### 'பனை' தொடர்பில் வினவினார் சீனத் தூதுவர்



15

## பயங்கரவாத சட்டம் இரத்தாகாமை கவலை

### சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினால் பரிந்துரைத்தபடி இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தப்படாமை அல்லது இரத்து செய்யப்படாமை கவலையளிப்பதாக சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் தெரிவித்துள்ளது.

15

சீனத் தூதுவர் வடக்குக்கு விஜயம் செய்துள்ள நிலையில்

## வெளிவிவகார அமைச்சரை அவசரமாக சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

சீனத் தூதுவர் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை அவசரமாக சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால்

15

## 2022இல் ஜெனிவாவில் இலங்கைக்கு கடுமையான நெருக்கடி ஏற்படும்

### ராஜித எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

"2022ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்குக் கடும் நெருக்கடி ஏற்படும்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

15

## நாட்டை மேம்படுத்தும் சவாலை ஏற்கத் தயார்

### அநுர குமார திஸாநாயக்க

(கொழும்பு)

நாட்டை மேம்படுத்தும் சவாலை ஏற்கத் தயாராக இருப்பதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை(வ-து)

# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி :- எழுதுனர்**

பதவி குறியீட்டு இல. :- 302/14

சம்பள அளவுத்திட்டம் :- 15,960 - 18,760
135 X 10 - 145 X 10

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி

**02. பதவி :- களஞ்சிய முகாமையாளர்/ கிளை முகாமையாளர்**

பதவி குறியீட்டு இல. :- 208/15

சம்பள அளவுத்திட்டம் :- 15,545 - 18,245
130 X 10 - 140 X 10

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாது 6 பாடங்களுடனான சித்தி

- கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணையும் ஆதனப்பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை : 18 - 45 வரை ஆகும்**

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சங்கத் தலைமையகத்தில் ரூபாய் - 20.00 ஐ செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30.12.2021 ஆம் திகதிக்கு முன்னதாக **"தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், புலோப்பளை வீதி, பளை"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**

**16.12.2021** (C-3269) **பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம், பளை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் தரம் - I இற்கான பரீட்சையில் எமது கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர்

**திரு. ஜெயலிங்கம் ஜெயகாந்த்**

அவர்கள் சித்தியடைந்தமையையிட்டு கல்லூரிச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

**ஆசிரியர் கழகம்**

**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி** (9103)

## அரச கால்நடை வைத்திய அலுவலகம், பருத்தித்துறை

## Govt. Veterinary Office, Point pedro

**பருத்தித்துறை அரச கால்நடை வைத்திய அலுவலகம் தற்காலிகமாக இயங்குவதற்குரிய கட்டடம் வாடகைக்குப் பெறுதல்.**

கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

- ☐ தற்போதைய அலுவலகத்திலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்திற்குள் பிரதான வீதிக்கு அருகில் இருத்தல் வேண்டும்.
- ☐ அலுவலகம் நடாத்தக்கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
- ☐ அண்ணளவாக கட்டடம் 1600 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாக இருத்தல்.
- ☐ கட்டடம் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட வேண்டும்.
- ☐ குடிநீர், மின்சாரம் மற்றும் மலசலகூட வசதி இருத்தல் வேண்டும்.
- ☐ பண்ணையாளர், வாகனம் இலகுவாக வரக்கூடிய பாதை இருத்தல் வேண்டும்.
- ☐ விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் வாடகையே வழங்கப்படும்.
- ☐ முற்பணம் வழங்கப்படமாட்டாது.

07 நாட்களுக்குள் (24.12.2021 இற்கு முன்னர்) அலுவலக நாட்களில் கால்நடை வைத்திய அதிகாரி, கால்நடை வைத்திய அலுவலகம், பருத்தித்துறையில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (C-3271)

**T.P: 021 226 3270** கால்நடை வைத்திய அதிகாரி,
Email: pointpedrovsoffice@gmail.com பருத்தித்துறை.

# 31ஆம் நாள் நினைவுகூருதலும் நன்றி நவில்தலும்

## திரு.முத்துராசா இரவீந்திரன்

**(முன்னாள் அதிபர் -
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்,
தேசியப் பாடசாலை)**



தோற்றம்
16 . 07 . 1968

மறைவு
17 . 11 . 2021

வன்னியின் இதயத்தில் வளமான கிளி மண்ணில்
வாழ்வாங்கு வாழ்ந்தவரே!
எங்களின் ஏற்றமிகு வாழ்வுக்காய்
ஏணியாய் நின்றவரே!
உங்களின் சாவினிலே உதிரம் உறைந்துவிட
உணர்வற்றுப் போனோமே!
நெஞ்சத்துக் கோவிலிலே நினைவாகிப் போனவரே!
நித்தமும் வாழ்வீர் ஐயா! — எம்
நினைவின்றிப் போகும்வரை

எமது மகன் முத்துராசா இரவீந்திரன் நோயுற்றிருந்தபொழுது மருத்துவ சேவை வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை 08ஆம் இலக்க விடுதி மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் அமரரின் மரண நிகழ்வில் குறுகிய கால அவகாசத்தின் மத்தியிலும் கலந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு பங்கேற்ற உறவினர்கள், நண்பர்கள், சக அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம், கண்ணீர் அஞ்சலி பதாதைகள் என்பனவற்றை பகிர்ந்தவர்களுக்கும் இணைய வழியூடாக நினைவஞ்சலி நிகழ்வை நடாத்தி எம்மை ஆறுதல்படுத்திய கல்வி வளர்ச்சி அறக்கட்டளை - கிளிநொச்சி, கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு - பிரித்தானியா சார்பாக Dr.த.சத்தியமூர்த்தி, Dr.இ.சதானந்தன் ஆகியோருக்கும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய கல்விச் சமூகத்தினருக்கும் நெஞ்சகலா நன்றிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம். (C-3272)

அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும்:-

**அம்மா, ஐயா, மனைவி, பிள்ளைகள்,
சகோதரி, சகோதரன், மருமக்கள், மைத்துனர், மைத்துனி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன-மத பேதம் கடந்து உயிரைக் காப்பதே மனிதம்

# பௌத்த துறவிகளாகிய நாம் தான் உண்மையில் இனவாதிகள்

### மனம் திறந்த சித்தார்த்த தேரர்

(கொழும்பு)

**இன்று தேரர்களாகிய நாம் மக்களிடத்தில் கடுமையாக விமர்சனத்திற்குள்ளாகிறோம். நாம் தான் இனவாதிகள் என்று நான் சொல்கிறேன். இதை கூறியதற்காக என்னை விமர்சிப்பார்கள். விமர்சித்தாலும் பரவாயில்லை. அதுதான்உண்மை என சித்தார்த்த தேரர்தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஜனநாயக நாட்டில் நல்லிணக்கத்துக்கான அரசியலமைப்பு என்ற தலைப்பிலான கருத்தமர்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"நீண்ட காலமாக என் மனதில் இருக்கும் பெரும் வேதனையான ஒரு விடயத்தை நான் இந்த இடத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்"

நான் சிலாபம் பகுதியில் கடற்கரைக் கிராமத்தில் பிறந்தேன். 'நான் வாழ்ந்த அந்த பகுதியில் நிறைய தமிழ் குடும்பங்கள் அன்று வாழ்ந்து வந்தன.

1956 காலம் அது. அந்த நாட்களில் நான் பாடசாலைக்கு சென்று வந்ததன் பின்னர் விகாரைக்கு சென்று அங்குள்ள புத்தகங்களை வாசிக்கச் செல்வேன்.

அன்று அதில் நான் பார்த்த விடயம் தான் இன்று வரை என் மனதில் பெரும் கவலையாக உள்ளது.

சிங்கள-தமிழ் கலவரம் இடம்பெற்ற வேளையில் சிங்களவர்களால் தார் பீப்பாய்களை கொதிக்க வைத்து அதில் சிங்களவர்களின் உடல்களை அமிழ்த்துகிறார்கள்.

அதேபோல் மற்றொரு சம்பவத்தையும் பார்த்தேன். அதேபோல் தார் பீப்பாய்க்களை கொதிக்க வைத்து அதில் தமிழர்களின் உடல்களை அமிழ்த்தி கொல்கிறார்கள்.

அன்று எனக்கு 10 வயது, இதை பார்த்த நாள் முதல் இன்று வரை சிங்கள-தமிழ் கலவரம் பற்றி பேச்சை எடுத்தால் என் மனம் என்னிடம் சொல்லும் "சித்தார்த்தா, நீ மாத்திரம் சிங்களவர்களுக்காக பேசக்கூடாது என்று"

அதேபோல் நேற்று மாலை ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தேன். அந்த புத்தகத்தில் கடந்த 70 களில் நடந்த யுத்தம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த யுத்தத்தின் போது இருந்த தமிழ் குடும்பங்களின் உறுப்பினர்கள், வீடுகளை விட்டு காடுகளுக்குள் ஒளிந்திருந்து ஒரு வாரம் கழித்து வீடு உள்ளதா? எனப் பார்க்க வருவார்கள்.

வந்து பார்க்கும் போது வீட்டிற்கு குண்டு தாக்குதல் மேற்கொண்டு வீடு சுக்குநூறாகியிருக்கும். இதன்போது ஒரு வீட்டின் தாய், தமது தந்தையை தேடி அழுகிறாள். காரணம் தந்தையை காணவில்லை.

பார்த்தால் தந்தை கிணற்றில் விழுந்துள்ளார். அல்லது இராணுவத்தினால் கொன்று வீசப்பட்டுள்ளார். இப்படியான நாட்டில் தான் நாம் ஜனநாயகத்தை பற்றிப் பேசுகிறோம்.

தேரர்களான எமக்கு, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் யாராக இருந்தாலும் பரவாயில்லை. அவர்களுடைய உயிரை உயிராக மதித்து அவர்களுக்கு உதவ முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

அரச சேவை பயிற்சிக்காக இணைக்கப்பட்டுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொடுக்கவுள்ளதாக அரச சேவை, மாகாண சபை மற்றும் உளளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அரச சேவை, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

இதுவரை 50,000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் அரச சேவை பயிற்சியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்டவர்கள் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அதே பாடசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தரமாக நியமிக்கப்படலாமென அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (நி)

## தடுப்பூசி பெற்ற பின் தொற்றுக்குள்ளானவர்கள் 6 மாதத்தின் பின்னரே பூஸ்டர் பெற வேண்டும்

### விசேட மருத்துவர் சமிதகினிகே

(கொழும்பு)

தடுப்பூசியைப் பெற்றதன் பின்னர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகும் தொற்றாளர்கள், ஆறு மாதங்களின் பின்னரே மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட மருத்துவ நிபுணர் சமித கினிகே தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரு வாரங்களாக நாட்டில் மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பதில் நிதியமைச்சராக பீரிஸ் நியமனம்



(கொழும்பு)

நாட்டின் பதில் நிதியமைச்சராக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளிநாட்டு பயணத் தினை மேற்கொண்டுள்ள நிலையிலேயே குறித்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## கலாசார உடையுடன் கந்தனை தரிசித்த சீனத்தூதுவர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் நேற்று வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். (நி-18-33)

# புல்லாவெளி ஆலய கூரை இடிந்து விழுந்து ஒருவர் படுகாயம்



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு புல்லாவெளி செபஸ்தியார் ஆலயத்தின் முகப்பு பகுதி இடிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் ஆலயத்தின் முகப்பு பகுதி இடிந்து விழுந்துள்ளது.

அச்சமயம் அங்கு உறங்கிக் கொண்டிருந்த கட்டைக்காட்டு முள்ளியானைச் சேர்ந்த எட்வேட் சைமன் வினோத் (வயது-20) என்னும் இளைஞர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இளைஞர் அம்புலன்ஸ் வண்டி மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. தேவாலய முகப்பு இடிந்து வீழ்ந்ததற்கான காரணம் தெரிய வரவில்லை. (நி-60-33-64-104)

### புலமைப்பரிசில் பரீட்சை

## வினாத்தாள் திருத்தப்பணிக்கு இணையவழியில் விண்ணப்பிக்கவும்

### பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள் திருத்த பணிக்கான விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதி நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரை கரப்பந்தாட்ட போட்டி

## இரு பிரிவிலும் யாழ்.அணி சம்பியன்



கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில் இரு பிரிவிலும் யாழ்.மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஆண்கள், பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ். மாவட்ட அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3 ஆம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட அணி பெற்றது.


பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது.

இதிலும் தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ்.மாவட்ட அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3 ஆம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட அணி பெற்றது. (4-90)



# அடிலெய்ட் டெஸ்டில்

## ஆஸியை மிரள வைத்த பட்லர்



அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜோரூட் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

பிரிஸ்பேனில் நடந்த முதலாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

அதுமட்டுமின்றி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையேயான 2 ஆவது ஆஷஸ் டெஸ்ட் போட்டி அடிலெய்டு ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

கொரோனாத் தொற்று உறுதியான நபருடன் தொடர்பில் இருந்ததால் அவுஸ்திரேலிய கப்டன் பேட் கம்மின்ஸ், 2 ஆவது டெஸ்ட் போட்டியிலிருந்து விலகியதால் அவருக்கு பதிலாக ஸ்டீவ் ஸ்மித் அவுஸ்திரேலியா கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். டாஸ் வென்ற அவுஸ்திரேலிய கப்டன் ஸ்மித் முதலில் பட்டிங்கை தேர்வு செய்தார்.

அவுஸ்திரேலிய அணி வீரர்களான ஹாரிஸ் மற்றும் வோர்னர் ஆகியோர் ஓபனிங்க பட்ஸ்மேன்களாக களமிறங்கினர்.

7 ஆவது ஓவரில் ஸ்டுவர்ட் பிராட் வீசிய இரண்டாவது பந்தை, பட்டிங் செய்த ஹாரிஸ் பின்பக்கமாக விளாச முயன்றார். ஆனால் பந்து அவரது பட்டில் பட்டு கீப்பருக்கும் ஸ்லிப்பிற்கும் இடையே சென்றது.

உடனே விக்கெட் கீப்பர் பட்லர் டைவ் அடித்து அந்தரத்தில் பறந்தபடி பந்தை கட்ச் பிடித்து அனைவரையும் மிரள வைத்தார். அசத்தலாக கட்ச் பிடித்த பட்லரை 'சுப்பர்மேன்' என ரசிகர்கள் பாராட்டி வருகின்றனர். (6)

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2470

### விதுன்




### விநோதா




### நிரோபா




### தாருசன்




### தநோயன்




### மிதுன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

17.12.2021
மார்கழி 02, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி முழுவதும்
கார்த்திகை பிற்பகல் 12.14 மணிவரை
சுபநேரம் 6.22-7.52 மணிவரை
இராகுகாலம் 10.52-12.22 மணிவரை
சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி

வளவன்

**மேஷம்:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்:** ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கடகம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** மறைமுக எதிர்ப்புகள் அகன்று மகிழ்ச்சி கூடும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சில இடையூறுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**விருச்சிகம்:** வழிபாட்டில் நம்பிக்கை கூடும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

உன் பலத்தையும் பலவீனத்தையும் தெளிவாக அறிந்து வைத்துக்கொள்

# அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள் அவதானத்துடன் செயற்படுங்கள்

## டெங்கு ஒழிப்பு பிரிவு எச்சரிக்கை

**(கொழும்பு) இந்த ஆண்டில் மாத்திரம் 30 ஆயிரத்திற்கும் அதிக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொவிட் தொற்றுக்கு சமாந்தரமாக டெங்கு அபாயமும் அதிகரித்து வருவதால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் ஷிலாந்தி செனவிரட்ன தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இவ்வாண்டில் இதுவரையில் 30,765 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நவம்பர் மாதம் 4,561 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனினும் டிசெம்பரில் இது வரையான (நேற்று முன்தினம் வரை) குறுகிய காலத்தில் 3,715 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கையானது கடந்த வருடங்களை விட அதிகமாகும்.

எனவே காய்ச்சல் உள்ளிட்ட ஏதேனும் உடல்நலக் குறைவு ஏற்பட்டால் தாமதிக்காது வைத்தியசாலைகளுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தற்போது பெரும்பாலான டெங்கு நோயாளர்கள் மிகவும் தாமதித்து வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்வதால் சிக்கல் நிலைமை ஏற்படுகிறது என மருத்துவர் தெரிவித்தார். (நி)

# ஜனாதிபதி எடுக்கும் முடிவுக்கு முத்திரையிடும் நிலையமாக பாராளுமன்றம்

## முன்னாள் சபாநாயகர் ஆதங்கம்

(கொழும்பு)

20 ஆவது திருத்தம் நிறை வேற்றப்பட்டமை காரணமாக பாராளுமன்ற அஞ்சல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இதன்படி ஜனாதிபதி எடுக்கும் தீர்மானத்துக்கு முத்திரையிடும் நிலையமாகவே பாராளுமன்றம் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.



ஜனநாயக சமூகத்தின் நல்லிணக்கத்துக்கான அரசியலமைப்பு தொடர்பான குழுவின் இரண்டாவது அமர்வு நேற்று கொழும்பில் இடம்பெற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஏற்கனவே மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட பாராளுமன்றில், 20 ஆவது திருத்தத்தின் மூலம் தனி ஒருவருக்கு சர்வ அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இது ஜனநாயகத்தின் மீது பாரிய தாக்குதலாக கருத முடியும். இந்த நிலையில் தற்போதைய நிலையில் இலங்கைக்கு புதிய ஆரோக்கியமான அரசியலமைப்பு ஒன்று நாட்டுக்கு அவசியம்.

எனவே நாட்டில் அனைவருக்கும் பொருத்தமான அரசியலமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். அதில் பொதுமக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்று கரு ஜெயசூரிய குறிப்பிட்டார். (நி)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
செல்வி.மாலினி மாட்டின் மரியதாஸ்
அவர்களின் தந்தையார்
**திரு.இராஜரெட்னம் மாட்டின் மரியதாஸ்**
அவர்கள் இறைபதம் அடைந்தமையை
இட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,
யா/கந்தர்மடம் சைவப்பிரகாச
வித்தியாலயம்.**

(9010)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 17.11.2021 ஆம் திகதி இறையடி சேர்ந்த
எமது அமைச்சின் உத்தியோகத்தர்
செல்வி.**இ.சாம்பவி** அவர்களது அன்புத்தந்தை
அமரர்.**முத்துராஜா இரவீந்திரன்** அவர்களின்
ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திப்பதோடு
இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிச் சங்கம்,
விவசாய அமைச்சு, வட மாகாணம்.**

(9049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்வி ஊடாக வன்முறைகளைத் தடுக்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர்

**(யாழ்ப்பாணம்)**

**சிறுவர், பெண்கள் வன்முறைகளைப் பாடசாலைக் கல்வி ஊடாக தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் புதன் கிழமை சிறுவர், பெண்கள் தொடர்பான வன்முறைகளை இல்லாதொழித்தல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது சிறுவர், பெண்கள் வன்முறைகள் அதிகரித்த நிலை காணப்படுகிறது. இதனை தடுப்பதற்கு பல்வேறு செயற்றிட்டங்கள் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டத்தக்க விடயம்.

சிறுவர், பெண்கள் மீதான வன்முறைகளை தடுப்பதற்கு பாடசாலைக்கல்வி ஊடாக மாணவர்களை நெறிப்படுத்த வேண்டும். ஏனெனில் பாடசாலை பருவத்திலே மாணவர்கள் சிறுவர்,பெண்கள் மீதான வன்முறைகள் எவை? அதை எப்படி தடுக்க முடியும், சட்டத்தில் எவ்வாறான பாதுகாப்புகள் உள்ளன என்பது பற்றி அவர்களுக்கு போதிக்க வேண்டும். ஆகவே சிறுவர், பெண்கள் மீதான வன்முறைகளை தகர்த்து ஒழுக்கம் மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப அனைத்து துறையினரும் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-6-104)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் அரசுடைமையாக்கப்பட்டு உரிமை கோரப்படாத சைக்கிள்கள் மற்றும் வெற்றுக் கொள்கலன்கள் என்பன எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய் க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றையதினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தர வேண்டும் எனவும் மல்லாகம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# அஞ்சலிக் கூட்டம்

(குப்பிழான்)

மூத்த முற்போக்கு எழுத்தாளரும் நாவலாசிரியரும் வெளியீட்டாளருமான செ.கணேசலிங்கன் நினைவாக அஞ்சலிக் கூட்டம் நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் இல-62, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் தாயகம் கலை இலக்கிய சமூக விஞ்ஞானச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் மூத்த எழுத்தாளருமான க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறும். (5-18)




பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வலி.மேற்கு பிரதேச சபைக்கு 210 வீதி விளக்குகளை நேற்று வழங்கி வைத்தார். (படம் : கஜிந்தன்)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு அபிஷேகங்கள், பூஜைகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜையும் வீதியுலா வருதலும் இடம்பெறும். (5)



இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இணைப்புச் செயலாளர் சதாசிவம் இராமநாதன் விருந்தினராகக் கலந்து கொண்டார். (படம் : ரவிசாந்)

# சீனத்தூதுவர்-அமைச்சர் யாழில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மைச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் மக்களுக்கு வளமான எதிர் காலத்தினைப் பெற்றுத்தரக் கூடிய முதலீடுகளையும் தொழில்நுட்பங்களையும் வரவேற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்பதாக தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் நடைபெற்ற வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு உதவித் திட்டங்களைப் பயனாளர்களுக்கு வழங்கி வைத்தார்.

கொரோனா பரவல் உட்பட பல்வேறு காரணங்களினால் வாழ்வாதார அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவைப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை முன்வைத்த நிலையில் சீனாவினால் முதல் கட்டமாக குறித்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-18-33-104)

# கலந்துரையாடல்

(குப்பிழான்)

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் "சிதைந்து போகிற தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும்" எனும் தலைப்பிலான கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வு நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (5-18-104)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை கல்வியங்காடு ஞானோதயா வித்தியாலயத்தில் இரத்ததான முகாம் நடைபெறும்.

எனவே ஆர்வம் உள்ளவர்களைக் கலந்து கொள்ள [illegible] கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (5-18)

# பாராட்டி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வரணியைச் சேர்ந்த சியானீஸ் மதுசன் என்ற 21 வயது இளைஞனின் உயரிய செயற்பாட்டால் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் வடவரணி கந்தசுவாமி ஆலய முன்றலில் வைத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 9 ஆம் திகதி சுமார் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதி வாய்ந்த தாலிக்கொடி உள்ளிட்ட தங்க ஆபரணங்கள் அடங்கிய கைப்பையை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்தமைக்காக பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.(5-6-30-33-60)

# புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

'துளிர்' புகைப்படக் கண்காட்சித் திறப்பு விழா இன்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொக்குவில் ஆடியபாதம் வீதி இல-264 இல் இடம்பெறவுள்ளது. இக் கண்காட்சியை நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் திங்கட்கிழமை ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6.30 மணிவரை பார்வையிட முடியும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக

# இந்த வருடத்தில் மட்டும் 10 ஆயிரத்து 713 முறைப்பாடுகள்

(கொழும்பு)

நாட்டில் சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவது தொடர்பான 32 சம்பவங்கள் தினமும் நடப்பதாக ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சிறுவர்கள் தொடர்பான செய்தி அளிக்கையின் போது ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் சம்பந்தமான அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஒரு மணிநேரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த வருடத்தில் மாத்திரம் சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் 10 ஆயிரத்து 713 முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாது



காப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ள இந்த முறைப்பாடுகளில் ஆயிரத்து 632 முறைப்பாடுகள் 5 வயதுக்கும் குறைவான வயதுடைய சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பான சம்பவங்கள் பற்றியது.

2 ஆயிரத்து 626 முறைப்பாடுகள் 6 முதல் 10 வயதுக்குட்பட்ட சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பானவை.

முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது, முறைப்பாடுகள் கிடைக்காமல் நடக்கும் இது போன்ற சம்பவங்கள் பல மடங்காக இருக்கலாம் என அவர் தெரிவித்தார். (நி)

## திருவெம்பாவையை முன்னிட்டு புராண படிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலின் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் திருவெம்பாவையை முன்னிட்டு தினமும் மாலை 3 மணிக்கு புராணபடிப்பு நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் மூத்த ஓதுவார் கலாபூஷணம் க.ந.பாலசுப்பிரமணியம் அவர்களினால் திருவாதவூரடிகளார் எனும் தலையங்கத்தில் புராணபடிப்பு நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும் என ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (நி)

# சீன உரக்கப்பலுக்கு இழப்பீடு வழங்கத் தேவையில்லை

### டொலர் நெருக்கடிக்குள் இது தேவையில்லை என்கிறார் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)



நாட்டில் பாரியளவில் டொலர் நெருக்கடி நிலவுகின்ற போது சீனாவின் பசளைகள் கப்பலுக்கு ஒரு சதமேனும் வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிறப்புக்கூட்டம் ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

சீன நிறுவனத்துக்கு கொடுப்பனவை செலுத்துவதற்கு பதிலாக இந்தக் கப்பலை இலங்கைக்கு வரவழைத்தது யார் என்பதை கண்டறிந்து அவருக்கு தண்டனை வழங்க வேண்டும்.

அத்துடன் அவரிடம் இருந்து பெற்று குறித்த கப்பலுக்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் மைத்திரிபால குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சமையல் எரிவாயு வெடிப்பு தொடர்பில் லிற்றோ நிறுவனத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் பதவி விலகியிருக்கவேண்டும். அல்லது பதவிகளில் இருந்து விலக்கப்பட்டிருக்க வேண்டும்.

எரிவாயு கொள்கலன்களின் கலவை மாற்றத்தை மேற்கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.எனினும் எதுவும் இடம்பெறவில்லை என்று மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தினார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா:செவ் 2 சூரி4இல் உயரம்:5'11"
தகைமை/தொழில்: H.N.D.E (Electronical Engineering Transporation Construction Inspector
எதிர்பார்ப்பு:பட்டதாரி வெளிநாடு ஆயின் USA Canada மட்டும்
தொ.இ: B/12194

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் உயரம்: 5'7"
கி.பா: செவ்7சூரி8இல்
தகைமை/தொழில்: பிரான்ஸ் PR இல்லை
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/12196

பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்:பூராடம் 3
கி.பா:42 ½ செவ் 3 சூரி4 இல்
உயரம்:6'2"
தகைமை/தொழில்: பிரான்ஸ்
எதிர்பார்ப்பு:படித்தபெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12198

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:37செவ் 12சூரி7இல் உயரம்:5'
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம் சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/12199

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா:செவ் 8 சூரி 11 ல்
தகைமை/தொழில்: ஆசிரியர் (B.Sc in Food Science Nutrition)
எதிர்பார்ப்பு:பட்டதாரி (அரச, தனியார் உத்தியோகம்)
தொ.இ:G/12083

பிறப்பு:1994இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா:54 ¾செவ் 1 சூரி2இல் உயரம்:5'3"
தகைமை/தொழில்:உதவி விரிவுரையாளர் (B.Sc)
எதிர்பார்ப்பு:பட்டதாரி (அரச, தனியார் உத்தியோகம்) வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12087

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா:10 செவ்.சூரி11 இல்
தகைமை/தொழில்:உதவி MLT
எதிர்பார்ப்பு: பட்டதாரி தனியார், அரச உத்தியோகம் (பொறியியலாளர்) உள்நாடு மட்டும்
தொ.இ:G/12088

பிறப்பு: 1998இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா:செவ் 7சூரி 8இல் உயரம்:5'7"
தகைமை/தொழில்: Fashion Design and Product Development (3Year) மொறட்டுவ பல்கலைக்கழகமாணவி (3 ஆம் வருடம்)
எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ:G/12090

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# இலங்கைக்கு சுற்றுலா வந்தால் வாகனங்களுடன் வாருங்கள்

### ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்த சுற்றுலாப் பயணி



(கொழும்பு)

இலங்கையில் ரயில் நிலைய ஊழியர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் பலர் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு வந்த வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் ரயில் நிலைய ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றார்கள் என்றால் டிக்கெட் ஏன் வெளியிடப்படுகின்றதென அவர் கேள்வி எழுப்பினார்.

விடுமுறையை செலவிட தேவையான அளவு இடங்கள் உள்ளதென குறிப்பிட்ட அவர் இலங்கைக்கு யாராவது பயணிக்க விரும்பினால் தங்கள் வாகனங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்தார். (நி)




# வாழ்த்தி மகிழ்கின்றோம்

கலாபூஷணம், ஞானஏந்தல், புராணவித்தகர், மூத்த ஓதுவார்

**க.ந.பாலசுப்பிரமணியம்**

(ஏழாலை கிழக்கு, ஏழாலை)

ஐயா அவர்கள் கடந்த 12.12.2021 அன்று தனது 89 ஆவது பிறந்த நாளை கண்டமையினை வாழ்த்தி அவரின் ஆசியை மனதார வேண்டி மகிழ்கின்றோம்.

Best Wishes

என்றும் அன்புடன்
வ.பரராசசிங்கம்

(9098)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக வேகமாகப் பரவும் ஓமிக்ரோனால் நுரையீரலை தாக்கும் திறன் குறைவு

## ஹொங்கொங் பல்கலை. ஆய்வில் தகவல்

**(கின்சாஸா)**

**ஓமிக்ரோன் புதிய கொரோனா திரிபு அசல் கொரோனா வைரஸை விட 70 மடங்கு அதிவேகமாகப் பரவுவதாகக் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஆராய்ச்சியாளர்கள் தலைமையிலான ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.**

இந்த ஆய்வின் முடிவுகள் ' ஓமிக்ரோன் திரிபு மனிதர்களை எவ்வாறு பாதிக்கிறது? என்பது குறித்த முதல் தகவலை வழங்குகிறது.

ஓமிக்ரோன் திரிபு அசல் கொரோனா மற்றும் டெல் டாவை விட மனிதர்களின் சுவாசக் குழாயில் 70 மடங்கு வேகமாக பெருகுகிறது என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதுவே ஓமிக்ரோன் மிக வேகமாகப் பரவக் காரணம் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

எனினும் ஆறுதல் அளிக்கும் விடயமாக அசல் கொரோனாத் திரிபை விட ஓமிக்ரோன் நுரையீரலைத் தாக்கும் திறன் குறைவாகவே உள்ளது. இதுவே ஓமிக்ரோனால் நோய் பாதிப்பு மற்றும் மரணங்கள் குறைவாக பதிவாவதற்கான காரணமாக இருக்கலாம் எனவும் ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

2020 முதன்முதலில் பரவிய அசல் கொரோனா வைரஸ், டெல்டா மற்றும் தற்போது பரவி வரும் ஓமிக்ரோன் திரிபுகள் மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்து ஆய்வாளர்கள் தனித்தனியாக ஆராய்ந்தனர். (நி)

## கிறிஸ்மஸ் அலங்காரங்கள் சேகரிப்பு சாதனை படைத்த இங்கிலாந்து பெண்



(பெர்லின்)

உலகிலேயே அதிகளவில் கிறிஸ்மஸ் அலங்கார ஆபரணங்களை சேகரித்து இங்கிலாந்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

ஜேர்மனி தலைநகர் பெர்லினில் வசித்து வரும் வேல்ஸைச் சேர்ந்த சில்வியா என்ற பெண்ணே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

கிறிஸ்மஸ் பொருட்களை சேகரிப்பதில் ஆர்வமுள்ள குறித்த பெண் விதவிதமான பொருட்களை தனது வீடு முழுக்க சேர்த்து வைத்துள்ளதுடன், இது தமக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## மலேசிய கடற்பரப்பில் குடியேற்றவாசிகளுடன் மூழ்கிய படகு

- 16 பேர் உயிரிழப்பு
- 27 பேர் மாயம்

(கோலாலம்பூர்)

இந்தோனேசிய குடியேற்ற வாசிகளுடன் சட்டவிரோதமாக மலேசியாவுக்குள் நுழைய முயன்ற படகொன்று மலேசிய கடற்பரப்பில் மூழ்கியதில் 16 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 27 பேர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மூழ்கிய இந்தப் படகில் 50 பேர் பயணம் செய்த நிலையில் 14 பேர் மட்டுமே இதுவரை உயிருடன் மீட்கப்பட்டனர்.

அண்டை நாடான இந்தோனேசியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல்வழியாக வேலை தேடி மலேசியாவுக்குள் நுழையும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தற்கொலை செய்யும் இல்லத்தரசிகள் இந்தியாவில் அதிகம்

### இந்தியாவின் தேசிய குற்றப்பதிவுகள் பணியகம்

(டில்லி)

இந்தியாவில் கடந்த ஆண்டில் மாத்திரம் 22 ஆயிரத்து 372 இல்லத்தரசிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக இந்தியாவின் தேசிய குற்றப் பதிவுகள் பணியகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 52 தற்கொலைகள் பதிவாகியுள்ளதுடன் இதில் 14.6 வீதமானோர் இல்லத்தரசிகள்.

இந்த மரணங்களுக்கான பிரதான காரணம் வீட்டுக்குள் நடக்கும் வன்முறைகள் என மனநல சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய அரசு அண்மையில் நடத்திய கருத்துக் கணிப்புகளுக்கு அமைய 30 வீதமான பெண்கள் தமது கணவனின் வன்முறைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தியாவில் கிராமங்களை சேர்ந்த பெண் பிள்ளைகள் '18 வயது பூர்த்தியானதுடன் திருமணம் செய்து வைப்பது பரவலாகக் காணப்படும் நிலைமையாகும்.

இந்த நிலைமையால் தொடர்ச்சியான கல்வி மற்றும் இளமைக்கால சுதந்திரம் என்பன தடுப்புக்கு உள்ளாகின்றன. இது கடும் மன அழுத்தம் வரை அதிகரிக்கக் கூடும் எனவும் மனநல நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

## பிலிப்பைன்ஸை தாக்கிய 'ராய்' சூறாவளி



(பிலிப்பைன்ஸ்)

ஒரு சக்திவாய்ந்த சூறாவளி நேற்று பிலிப்பைன்ஸின் தென்கிழக்கு பகுதியை கடக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் திடீர் வெள்ளம், நிலச்சரிவு மற்றும் பேரழிவுக்கு உள்ளாகக்கூடிய அதிக ஆபத்தான பகுதிகளிலிருந்து சுமார் ஒரு இலட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த சூறாவளிக்கு "ராய்" என்று பெயரிடப்பட்டது.

இந்த ஆண்டு பிலிப்பைன்ஸை தாக்கும் 15 ஆவது புயல் ராய் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## சூரியனை அடைந்த நாசா விண்கலம்

(நியூயோர்க்)

பார்க்கர் சோலார் புரோப் விண்கலம் சூரிய கொரோனா வழியாக தனது பயணத்தை தொடரும் என்றும், பூமியில் இருந்து ஆய்வு செய்ய முடியாத தகவல்களை அது, விஞ்ஞானிகளுக்கு வழங்கும் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

சூரியனின் மர்மங்களை அறிந்து கொள்ள சூரியனுக்கு மிக அருகில் பயணிக்கும் பார்க்கர் சோலார் புரோப் என்கிற விண்கலத்தை நாசா கடந்த 2018 ஆம் ஆண்டு விண்ணுக்கு அனுப்பியது.

பார்க்கர் விண்கலனை மீண்டும் மீண்டும் சூரியனுக்கு மிகவும் அருகில் அனுப்பி, அதைக் கடந்து செல்ல வைப்பதே இந்த சாகசத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த நிலையில் பார்க்கர் விண்கலம் சூரியனின் வளிமண்டலத்துக்குள் நுழைந்து வரலாறு படைத்துள்ளதாக நாசா அறிவித்துள்ளது.

இதுகுறித்து நாசா வெளியிட்டுள்ள அறிக்கையில் "வரலாற்றில் முதன்முறையாக ஒரு விண்கலம் சூரியனை தொட்டுள்ளது. நாசாவின் பார்க்கர் சோலார் புரோப் விண்கலம் இப்போது சூரியனின் மேல் வளிமண்டலத்தில் கொரோனா வழியாக பறந்து அங்குள்ள துகள்கள் மற்றும் காந்தப் புலங்களை மாதிரி எடுத்துள்ளது" எனக் கூறப்பட்டுள்ளது.

சூரிய வளிமண்டலத்தின் வெளிப்புறப் பகுதி சூரிய கொரோனா என அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பார்க்கர் சோலார் புரோப் விண்கலம் சூரிய கொரோனா வழியாக தனது பயணத்தை தொடரும் என்றும், பூமியில் இருந்து ஆய்வு செய்ய முடியாத தகவல்களை அது, விஞ்ஞானிகளுக்கு வழங்கும் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

இந்த வரலாற்று நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதமே நிகழ்ந்திருந்தாலும், பார்க்கர் விண்கலம் சூரிய கொரோனா வழியாகத் தான் கடந்து சென்றது என்பது, தரவுகளின் பகுப்பாய்வுகள் மூலம் இப்போதுதான் உறுதி செய்யப்பட்டது என நாசா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவளத் திணைக்களத்தால் முல்லைத்தீவில் காணி அபகரிப்பு

## அதிருப்தியில் மக்கள்

**(முல்லைத்தீவு)**

**முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, மதவாளசிங்கன்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 6,825 ஹெக்டேயர் நிலப்பரப்பினை வனவளத் திணைக்களம் புதிதாக அபகரிப்புச்செய்துள்ளது. வனவளத் திணைக்களத்தின் இச்செயற்பாட்டிற்கு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், இவ்வாறு அபகரிப்புச் செய்யப்பட்ட பகுதியில் வனவளத் திணைக்களம் அண்மையில் பெயர்ப் பலகை ஒன்றை நாட்டியுள்ளது.

குறித்த பெயர்ப்பலகையில், நாகச்சோலை ஒதுக்கப்பட்ட வனம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அப் பகுதியின் மொத்தப் பரப்பளவு 6 ஆயிரத்து 825 ஹெக்டேயர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த வனப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழையக்கூடாதெனவும், அப் பகுதிக்குள் வனப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களைப் புரிதல் தண்டனைக்குரிய குற்றமெனவும், வனப்பாதுகாப்பு கட்டளையின் கீழ் தண்டனை வழங்கப்படும் எனவும் அந்த அறிவிப்பு பலகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வனவளத் திணைக்களத்தால் புதிதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பானது, ஏற்கனவே மக்களுக்கு வழங்கப்பட்ட பகுதி என மதவாளசிங்கன்குளம் பகுதி பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு வனவளத்திணைக்களம் இவ்வாறு புதிதாக பெயர்ப்பலகை நாட்டும் போது தமக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கவில்லை எனவும் தெரிவிக்கின்றன. (5-6)

# கோரக்கன்காட்டுப் பகுதியில் தொடர்ந்தும் ரவைகள் மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கோரக்கன் காட்டுப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து இதுவரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன்காட்டுப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் அடையாளம் காணப்பட்ட இடத்தில் வெடி பொருட்களை மீட்கும் பணி கிராம உத்தியோகத்தர் மற்றும் விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் முன்னிலையில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் வரை முன்னெடுக்கப்பட்ட அகழ்வின்போது ஒரு இலட்சத்து 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன. (5-6-315)

# கட்டுத்துவக்குடன் இருவர் கைது

(தருமபுரம்)


ஜெயபுரம் பகுதியில் கட்டுத்துவக்குடன் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

சுற்றுக் கடமையின் போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கியுடன் (கட்டுத்துவக்கு) கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் ஜெயபுரம் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

அவர்களிடம் விசாரணை மேற்கொண்ட ஜெயபுரம் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகத்தெரிவித்தனர். (5-6-316)




# தொடர்ந்து பெய்து வரும் மழையால் விளாங்குளத்தில் பயிர்கள் அழிவு



(கண்டாவளை)

முல்லைத்தீவு வன்னி விளாங்குளம் மற்றும் அம்பாள் புரம் ஆகிய பகுதிகளில் அண்மைய நாட்களாக பெய்த தொடர் மழை காரணமாக 10 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டதுடன் தமது வாழ்வாதார பயிர்களும் அழிவடைந்துள்ளதாகவிவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பல்வேறு வகையான பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். அறுவடைக்கு தயாராக இருந்த பப்பாசி மற்றும் மிளகாய் செடி கொடித்தோடை போன்ற பயிர்களே இவ்வாறு அழிவடைந்துள்ளன. (5-6-315)

# பிரதேச சபை உறுப்பினர் கட்சியிலிருந்து நீக்கம்

(மன்னார்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்பட்ட நானாட்டான் பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான பெனடிக்ட் யாக்கோப்பிள்ளையைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நானாட்டான் பிரதேச சபையின் பாதீடு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது கட்சியின் முடிவுக்கு மாறாக குறித்த உறுப்பினர் செயற்பட்டார் என்பதற்காக கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ஙி)

# வெடிக்காத நிலையில் இரண்டு ஷெல்கள் மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டைப் பகுதியில் வயல் காணியில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது இரண்டு மோட்டார் ஷெல்கள் இனங் காணப்பட்டன.

கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டு வருவது அதிகரித்துள்ளது. இது மக்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. (5-6-316)



வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்கு பிரதேச செயலகமும், மாந்தை மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச கலாசார விழா நேற்று முன்தினம் புதன்கிழமை மாந்தை வடக்கு பலநோக்கு கூட் டுறவுச் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: ஜோசப் நயன்)

# கஞ்சாவுடன் மூவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் கஞ்சா பொதிகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் மூவரை வவுனியாப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில், வவுனியா நகர் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் இளைஞர்களின் நடமாட்டம் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் அங்கு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

உடைமையில் கஞ்சாவினை சிறுசிறு பொதிகளாக வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியாவைச் சேர்ந்த மூன்று இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்களை வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (5-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியுடன் மட்டுமே எரிவாயு விற்கப்படும்

## லிட்ரோ எரிவாயு நிறுவனம் உறுதி

(கொழும்பு)

நுகர்வோர் அதிகார சபை மற்றும் இலங்கை தரநிர்ணய நிறுவக அனுமதியுடன் மட்டுமே உள்நாட்டு எரிவாயுவை விற்பனை செய்து வெளியிடுவோம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்களில் இருந்து எரிவாயு கசிவதால் ஏற்படும் விபத்துக்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி சிவில் சமூக செயற்பாட்டாளர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த நீதிப் பிரேரணை மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே லிட்ரோ எரிவாயு நிறுவனம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர இதனைத் தெரிவித்தார். (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## நினைத்ததை நிறைவேற்றும் துளசி பூஜை



**வழிபடும் முறை**

கார்த்திகை மாதம் பௌர்ணமி தினத்தன்று துளசித்தாய் அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன. அன்று துளசித் தாய்க்கு பூஜை செய்வது மிகுந்த பலனை தரும். துளசி பூஜை செய்ய வாரத்தில் செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக் கிழமையும், கார்த்திகை மாதம் வளர்பிறை துவாதசியும் ஏற்ற நாட்கள் ஆகும்.

கார்த்திகை மாதம் ஏகாதசிக்கு மறுநாள் துவாதசி அன்று மகா விஷ்ணு துளசியைத் திருமணம் செய்து கொண்டார். அந்த நாளை "பிருந்தாவன துளசி" அல்லது 'துளசிக் கல்யாணம்' எனக் கொண்டாடுவார்கள். அன்று காலை சுமங்கலிப் பெண்கள் குளித்துவிட்டு, துளசி மாடத்தை சுற்றி மெழுகி, கோலமிட்டு காவி பூச வேண்டும்.

சாதம், பால், பாயாசம், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பழங்கள், தேங்காய் வைத்து பூஜை செய்ய வேண்டும். ஒரு விளக்குத் திரியை நெய்யில் வைத்து, தீபம் ஏற்றி வணங்க வேண்டும். துளசி லட்சுமி வடிவானவள். துளசி செடியுடன் நெல்லிமரக்குச்சி (மகா விஷ்ணு வடிவம்) சேர்த்து வைக்க வேண்டும். வீட்டில் சாளகி ராமம் இருந்தால் அதனையும் துளசி மாடத்தில் வைத்து பூஜை செய்ய வேண்டும்.

நிவேதனமாக சர்க்கரைப் பொங்கல் வைத்து வணங்க வேண்டும். துளசி பூஜைக்கு முன்னர் விக்னேஸ்வர பூஜை செய்ய வேண்டும். பூஜை முடிந்ததும் பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு, பூ, கண்ணாடி வளையல்கள் வைத்து கொடுக்க வேண்டும்.

ஒரு ஏழை அந்தண சிறுமியை மனையில் அமரவைத்து சந்தனம் பூசி, குங்குமம், புஷ்பம், புதுத்துணி கொடுக்க வேண்டும். பால் பாயாசத்தை பாத்திரத்துடன் தானம் கொடுக்கலாம். துளசியை ஒவ்வொரு இலையாக இட்டு பூஜை செய்ய வேண்டும். ஒரே இலையை கிள்ளி கிள்ளி போடக் கூடாது. பௌர்ணமி, அமாவாசை, துவாதசி, ஞாயிற்றுக்கிழமை, கிரகண காலம், மதியம், சந்தியா காலம், இரவு முதலிய காலங்களில் துளசியைப் பறிக்கக் கூடாது.

கார்த்திகை மாதம் துளசி பூஜை செய்பவர்களுக்கும், துளசியால் பகவானை அர்ச்சனை செய்பவர்களுக்கும் அவர்கள் நினைத்தது நிறைவேறும். அவர்களின் எல்லா கோரிக்கைகளும் நிறைவேறப் பெறுவார்கள் என புராணம் கூறுகிறது. கீழ்க்கண்ட நாமாவளிகளைக் கூறி குங்குமத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

ஓம் ஸ்ரீம் பிருந்தா தேவ்யை நம
ஓம் விஸ்வ பூஜதாயை நம
ஓம் விஷ்ணுப்பிரியாயை நம
ஓம் தேவ மூலிகாயை நம
ஓம் கிருஷ்ண ப்ரியாயை நம
ஓம் சவுபாக்ய நிலயாயை நம
ஓம் புஷ்பசாராயை நம
ஓம் நந்தவன நாயகாயை நம
ஓம் விஸ்வ பாவணாயை நம
ஓம் தான ப்ரதாயின்யை நம
ஓம் மகாலட்சுமி வாசாயை நம
ஓம் சகல மாட கலாலங்கார்யை நம
ஓம் ஸ்ரீராமப்பிரியாயை நம
ஸ்ரீதுளசி தேவ்யை நமோ நம.

பக்தியுடன் துளசி பூஜை செய்து வழிபடுபவர்கள் வீட்டில் செல்வம் கொழிக்கும். துர்மரணங்கள் ஏற்படாது. இப் பிறவியில் அனைத்து நலன்களும் கிடைக்கப் பெற்று முக்தி பேற்றினை பெறுவார்கள்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## சுற்றுலாப் பயணிகள் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 12 நாட்களில் 24 ஆயிரத்து 773 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அத்துடன், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முதல் தற்போது வரையில் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 762 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கசகஸ்தான், அமெரிக்கா, பிரான்ஸ், கனடா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் இருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

## எரிவாயுவுடன் மற்றுமொரு கப்பல் கொழும்பை வந்தடைந்தது

(கொழும்பு)

எரிவாயுவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.

இரண்டாயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிக எரிவாயுவை ஏற்றியபடியே இந்தக் கப்பல் வந்தடைந்தது.

அந்தக் கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள எரிவாயுவின் தரத்தை பரிசோதிப்பதற்காக மாதிரிகள் பெறப்பட்டு, அவற்றை பரிசோதிப்பதற்காக இரு நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளதாக குறித்த சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க தெரிவித்தார். (நி)

## காணி உறுதிப்பத்திரத்தை இணையவழியில் பெறலாம்

(கொழும்பு)

காணி உறுதிப்பத்திரங்களை இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என பதிவாளர் நாயகம் எம்.வீரசேகர தெரிவித்துள்ளார். நேற்று முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 380 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 700 | 700 | 850 | 800 |
| தக்காளி | 450 | 450 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 70 | 50 |
| கோவா | 360 | 350 | 450 | 500 |
| கரட் | 280 | 500 | 520 | 600 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 300 | 300 | -- | 300 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 200-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 220 | 220 |
| பாகற்காய் | 700 | 700 | 780 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 450 | 500 | 400 | 400 |
| லீக்ஸ் | 340 | 350 | 450 | 400 |
| பீற்றூட் | 260 | -- | -- | 300 |
| கறிமிளகாய் | 400 | 700 | -- | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 360 | 350 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 130 | 120 | -- | 100 |
| தேசிக்காய் | 260 | 200 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 230 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 500 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 180 | 150 | -- | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 25 | 40 | 40 | 30 |
| ஈரப்பலா | 80 | 140 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை கைப்பற்றும் நோக்கில் செயற்படும் சர்வதேச வல்லரசுகள்

## சம்பிக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**உலக வல்லரசுகள் பலமான அரசியல் உடன்படிக்கைகளையும் நிதி உடன்படிக்கைகளையும் வைத்துக் கொண்டு எமது தேசிய வளங்களை மட்டுமல்லாது வலுசக்தி, மூலதன வளங்களையும் கைப்பற்றும் நோக்கத்தில் செயற்படுவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை நிலையில், நாட்டில் இறுதி காலாண்டு மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பது தெளிவாக வெளிப்படுகிறது.

தேசிய நிதி மற்றும் வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை என்பன பாரிய சூறாவளியாக இலங்கையைத் தாக்கும்.

வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை முற்று முழுதாக வீழ்ச்சி காணும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு இந்த ஜனாதிபதி ஆட்சியில் இருப்பார். ஆனால் இன்னும் ஒரு மாதம். மட்டுமே தான் ஆட்சியில் இருப்பேன் என்ற நிலைப்பாட்டில் தீர்மானம் எடுக்கிறார்.

அதேபோல்சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதா? இல்லையா? என்பது குறித்து இன்னமும் அரசாங்கம் ஆராய்கிறது.

தேசிய வளங்களை சர்வதேச நாடுகளுக்கு விற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் ஆரோக்கியமான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரப் போவதில்லை. இந்த சூழலில் சர்வதேச சக்திகள், எமது பலவீனமான, வீழ்ச்சி கண்டுள்ள இராச்சியத்தை கைப்பற்றும் முயற்சியில் சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

உலக வல்லரசுகள் பலமான அரசியல் உடன்படிக்கைகள், நிதி உடன்படிக்கைகளை வைத்துக்கொண்டு எமது தேசிய வளங்களை மட்டுமல்ல, வலுசக்தி, மூலதன வளங்களையும் கைப்பற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு எம்மால் விடுபட முடியாத அடிமைத் தனத்திற்குள் சகலரையும் நெருக்கும் நோக்கத்தில் நாட்டை ஆளும் இரண்டு வெளிநாட்டு பிரஜைகளும் முயற்சிக்கின்றனர்.

இவர்களின் பிடியில் இருந்து நாட்டை விடுவித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் ஒட்டு மொத்த நாட்டு மக்களும் பாதிக்கப்படுவார்கள் என அவர் தெரிவித்தார். (நி)

# கஞ்சாவை சட்டமாக்க சதித்திட்டம்

## மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம்

(கொழும்பு)

கஞ்சா செய்கையைச் சட்டபூர்வமாக்குவதன்ஊடாகஅதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கையின் கடனைச் செலுத்த முடியாது என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் கஞ்சா வர்த்தகத்தில் ஈடுபடும் பல நிறுவனங்கள் தற்போது 10 பில்லியன் அமெரிக்க டொலர் வரையில் இழப்புகளை சந்தித்துள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 2019 ஆம் ஆண்டு முதல் கஞ்சா எண்ணெய் விலையானது 75 சதவீதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கஞ்சாவிற்கான கேள்வி குறைவாக இருப்பினும் உற்பத்தி அதிகமாக இருப்பதால் சர்வதேச அளவில் கஞ்சா எண்ணெய் பொருட்களின் விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் அதனை சட்ட ரீதியாக அங்கீகரிப்பதற்கு முயலுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம் நாட்டில் இந்த செய்கை இடம்பெறுமாயின் தேசிய சந்தைக்குள் சட்ட விரோதமாக ஊடுறுவுவதற்கும் வாய்ப்புள்ளது.

இதனால் அதிகளவானோர் பாதிப்படையும் அபாயம் உள்ளதுடன், நாட்டின் பொருளாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# 'ஆசியாவின் ராணி'யை சொந்தமாக்குவதில் அமெரிக்கா, சீனா பங்கேற்பு

(கொழும்பு)

இலங்கையில் கண்டறியப்பட்ட 'ஆசியாவின் ராணி' என பெயரிடப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய நீலக்கல்லை கொள்வனவு செய்வதில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி- பட்டுகெதர பகுதியில் 310 கிலோகிராம் எடை கொண்ட இந்த நீலக்கல் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது.

அந்த வகையில் தற்போது இணையத்தின் ஊடாக இடம் பெறும் சர்வதேச ஏல விற்பனையில், குறித்த நீலக்கல்லை முன்வைப்பதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியம், ஆரம்பத்திலேயே விலைமனுக் கோரலுக்கான விண்ணப்பத்தை முன்வைத்துள்ள நிலையில் சீனாவும் இந்தப் போட்டியில் இணைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இத்தகைய நிலையில் அமெரிக்காவும் வோஷிங்டன் நகரிலுள்ள நூதனசாலையில் குறித்த கல்லை காட்சிப்படுத்துவதற்காக ஏலத்தில் பங்கேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# இன்று ஒரு தகவல்

## தெளிவுறச் சொல்வோம்

நம்மால் ஆகவேண்டிய காரியம், நமக்கு ஆக வேண்டிய காரியம் ஆகியவற்றை ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என வைத்துக் கொள்வோம்.

அப்போது அத்தகைய செயல்களைத் தெளிவாக அவர்களிடம் எடுத்துச் சொல்கிறோமோ என்று ஒரு கேள்வி. பெரும்பாலும் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

இதனால் பல குழப்பங்கள், நட்டங்கள், விபரீதங்கள். ஆனால் அடிப்படை என்னவோ சாதாரணமான விடயம். அதாவது தெளிவுறச் சொல்லாதது.

நாம் சொன்னவற்றை அவர்கள் நன்கு கேட்டுக் கொண்டார்களா? புரிந்து கொண்டார்களா? என்பதை நாம் முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஒருவேளை நாம் செய்யச் சொல்லும் காரியங்களில் தடையோ, இடையூறுகளோ, சிக்கல்களோ ஏற்படக் கூடும் என்பதை நாமாக முன்னதாகவே கணக்கிட்டு அப்படி ஏதும் ஏற்படின் அதற்கு மாற்றுச் செயல் என்ன? பரிகாரம் யாது? என்பதையும் பொறுப்பேற்றவரிடம் விளக்கி விட வேண்டும்.

எதையும் பச்சை குழந்தைக்குப் பாடம் சொல்லித்தருவதைப்போல் நிறுத்தி நிதானமாகச் சொல்ல வேண்டும். அந்த நேரத்தில் ஒன்றிரண்டு நிமிடங்களை அதிகமாகச் செலவழிக்கத் தவறினால் அது முன்பு கூறியது போன்ற பெருத்த பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். கையைக் கட்டிக்கொண்டு ஏணியில் ஏற முயல்வதும் விதை நெல்லை மிச்சப்படுத்துகிறேன் என்று விதைக்காமல் இருப்பதும் புத்திசாலித்தனமாகுமா?

நாம் சொல்பவை இரண்டு விதமான அர்த்தங்களைத் தரக் கூடாது. அப்படியா! நான் இப்படி புரிந்து கொண்டேன் என்று மற்றவர்கள் குழப்பமடையும் அளவிற்கு உங்களது வார்த்தைகள் அமைந்து விடக் கூடாது.

கடிதம் எழுதுவதிலும் விளக்கம் தெளிவுற இருக்க வேண்டும். 26 ஆம் திகதியன்று இராமேஸ்வரம் எக்ஸ்பிரசில் வருகிறேன் என்று ஒருவர் கடிதம் எழுதுவார். இந்த மனிதர் 26 ஆம் திகதியன்று கிளம்பி 27 அன்று வருகிறாரா? அல்லது 26 அன்று காலையே வந்து சேருகிறாரா? என்று எதிராளி குழம்பிப் போவார்.

சிலர் பணத்தை மிச்சம் பிடிப்பதாக எண்ணிக் கொண்டு மதர் எக்ஸ்பயர்ட் என்று தந்தி கொடுப்பார்கள். தந்தியடித்தவரின் தாய் இறந்துபோனாரா? அல்லது தந்தியைப் பெற்றவரின் தாய் வெளியூரில் (இருக்க அவர்) இறந்து போனாரா? துடிதுடித்துப் போவார் இரண்டாமவர்.

முழுக்க முழுக்க ஒருவருக்கு விடயத்தைச் சொல்ல விரும்பினால் எதற்காக? என்ன? ஏன்? எங்கு? எப்பொழுது? எவ்வளவு? யாரால்? யாருக்கு? யாருடைய?

ஆகிய எந்தச் சந்தேகமும் அவருக்கு எழக் கூடாத வகையில் சொல்ல வேண்டும். நாம் சொல்பவை அப்படி அமையுமானால் அனைத்துச் செயல்களும் அமோகமாய் நடக்கும்!


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## உழைப்பை மறக்கலாமா?



பொழுது விடிந்து வானம் வெளுக்கத் தொடங்கியது. மான் தன் நண்பர்களைத் தேடி அவற்றின் இருப்பிடத்திற்குச் சென்றது. மானின் நண்பர்களான குரங்கு, அணில், மயில் எதுவும் அங்கே இல்லை.

சிறு வயதிலிருந்தே நான்கும் நண்பர்கள். அவர்கள் எப்போதும் எங்கும் சேர்ந்தே செல்வார்கள். உணவைத் தேடி உண்பார்கள். சேர்ந்தே விளையாடுவார்கள்.

ஆனால், இரண்டு நாட்களாக மூவரும் மானின் கண்ணில் படவே இல்லை. 'எங்கே போயிருப் பார்கள்?' என்று யோசித்தபடி மான் நண்பர்களைத் தேடியது. அவர்கள் தென்படவே இல்லை. களைத்துப் போன மான் ஒரு மரத்தடியில் வந்து படுத்தது.

"என்ன மானே, தனியாக இருக்கிறாய்? உன் நண்பர்களைத் தேடுகிறாயா?" என்ற குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தது மான். மரத்தின் மேல் கிளையில் குருவி அமர்ந்திருந்தது.

"ஆமாம்.என் நண்பர்கள்கடந்த இரண்டு நாட்களாக எங்கே போனார்கள் என்றே தெரியவில்லை. அவர்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றது மான்.

"உண்மையிலேயே உன் நண்பர்கள் எங்கே போயிருக்கிறார்கள்என்று உனக்குத் தெரியாதா? இரண்டு நாட்களாக அவர்கள் அருவிக்கரையே தஞ்சமென்று கிடக்கிறார்கள். அங்கே போய்ப் பார்" என்றது குருவி.

"அருவிக் கரைக்கா? அங்கே போய் என்ன செய்கிறார்கள்? இதோ போய்ப் பார்க்கிறேன்" என்று குருவியிடம் சொன்ன மான், அருவிக்கரை நோக்கி ஓடியது.

அருவிக் கரையில் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக நின்றிருந்தார்கள். ஒரு புதர்ச் செடியின்பின்னே போய் மறைந்து கொண்ட மான், தன் நண்பர்களைத் தேடியது. மான் கண்ட காட்சி திடுக்கிட வைத்தது.

ஓரிடத்தில் அதன் நண்பனான குரங்கு மனிதர்கள் தின்றுவிட்டு குப்பையில் வீசிய பழத் துண்டுகளை ஆசை ஆசையாகத் தின்று கொண்டிருப்பதைப் பார்த்தது.

அப்போது சிலர் குரங்கின் மீது கல்லை எடுத்து வீசினார்கள். குரங்கு கற்கள் தன்மீது படாதவாறு அங்கு மிங்கும் ஓடிய பிறகு மீண்டும் வந்து பழங்களைத் தின்றது.

இன்னோர் இடத்தில் மனிதர்கள் குப்பையில் வீசிய கெட்டுப் போன கடலைகளைத் தின்றுகொண்டிருந்தது மயில். (தொடரும்)

# மகாபாரதம்

**276**

### சத்தியம் உயர்ந்த தருமம்



பீஷ்மர் தருமரைப் பார்த்து, "தருமா! மேலோர் சத்தியத்தை 13 பிரிவாகப் பிரித்துள்ளனர். அவை உண்மை, சமதாபாவனை, தமம், அழுக்காறு இன்மை, அமைதி, பொறுமை, உத்தமப் பொறுமை, வெறுப்பின்மை, தியாகம், தியானம், மேண்மை, தைரியம், அஹிம்சை என்பனவாகும்.

உண்மை என்பது எப்போதும் நிலை பெற்றிருப்பது. அழிவில்லாதது. எல்லா அறங்களுக்கும் அடிப்படையானது. இது யோகத்தால் சாத்தியமாகும்.

சமதாபாவனை என்பது, இன்ப துன்பங்களை ஒரே விதமாக ஏற்றுக் கொள்வது. இது விருப்பு, வெறுப்பு இன்மையால் ஏற்படும் தமம் என்பது, அச்சம் இன்மையும் சினத்தை அடக் குவதும் ஆகும். இது ஞானத்தால்உண்டாகும்.

அழுக்காறு இன்மை என்பது பொறாமை யின்மை. எப்போதும் உண்மையையே நாடுவதால் இது கைகூடும்.

அமைதி எனப்படுவது மனம், சொல், செயல் ஆகியவை சலனமற்று இருப்பது. இது தரும காரியங்களால் அடையப்படும்.

பொறுமை என்பது பொறுக்கக்கூடியவற்றைப் போலவே பொறுக்க முடியாதவற்றையும் பொறுத்துக் கொள்வதாகும். சத்தியத்தைப் பின்பற்றுவதால் இதனைப் பெற முடியும்.

உத்தமப் பொறுமை என்பது, தருமத்தின் காரணமாகப் பிறர் செய்யும் எல்லாத் தீமைகளையும் பொறுத்துக் கொள்வதாகும். மேலான பொறுமையாகிய இது மனவலிமை யால் பெறக் கூடும்.

வெறுப்பின்மை என்பது பிறர் குற்றம் காணாதிருப்பது. இது ஈகையால் - தானத்தால் அமையும். தியாகம் என்பது, மனதில் தோன்றும் கெட்ட எண்ணங்களை - மாசுகளை அறவே துறத்தலாகும்.

தியானம் என்பது, தருமத்தை எப்போதும் சிந்திப்பதாகும். இது எப்போதும் நல்லவனவற்றை சிந்திப்பதால் உண்டாகும்.

மேன்மை என்பது, எல்லா நற்குணங்களையும் பெற்றிருப்பதாம். நல்லவனவற்றை ஆய்ந்து ஆய்ந்து செய்வதன் மூலம் ஒருவன் மேன்மை அடையக்கூடும்.

தைரியம் என்பது கீழான சிந்தனைகளை ஒழித்தலாகும். இது சினத்தை அடக்குவதாலும், அச்சத்தை அகற்றுவதாலும் ஏற்படும். அஹிம்சை என்பது மனம், வாக்கு, செயல் இவற்றால் பிற உயிருக்குத் தீங்கு செய்யாதிருத்தல். அன்புடைமையாலும் அருளுடைமையாலும் ஒருவர் அஹிம்சையை பின்பற்ற முடியும்.

இப்படி பதின்மூன்று பிரிவாகப் பேசப்படும் சத்தியமே அனைத்து அறங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறது என்பதை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்" என்று உரைத்தார்.

### கொல்லாமையின் சிறப்பு

உமா மகேஸ்வரன் உமா மகேஸ்வரியைப் பார்த்து, "மக்களுக்கு இன்பத்தைத் தரும் தருமத்தைச் சொல்கிறேன்.. கேள்.." என சொல்லத் தொடங்கினார்.

கொல்லாமைதான் அறங்களில் தலையாய அறம். கடவுள் வழிபாடும், எப்போதும் ஆகமப் பயிற்சியும், மன அடக்கமும் கொல்லாமைக்கு ஈடாகாது. தாய் தந்தையரைப் போற்றுவதும் புண்ணிய நதிகளில் போராடுவதும் கூடக் கொல்லாமைக்கு நிகரில்லை" என்றார்.

"அப்படியானால் ஏன் யாகங்களில் பசுக்களைக் கொல்கின்றனர்? மன்னர்கள் வேட்டையாடச் செல்கின்றனரே! இது என்ன அறம்" என வினவினாள் மகேஸ்வரி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்கள் தங்களை அழித்துக் கொண்டு பிறருக்கு உதவுவார்கள். திரி தான் எரிந்து நமக்கு ஒளி தருகின்றது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாம் செய்த பாவம் ஊழ்வினையாக முந்தும்

ஊழ்வினை பற்றிப் பேசாதவர்கள், பாடாதவர்கள் இல்லை எனலாம். அந்தளவுக்கு ஊழ்வினையை உணர்த்தப் பலரும் முயன்றுள்ளனர்.

இதில் வள்ளுவர் ஊழ் என்ற அதிகாரத்தின் மூலம் ஊழ்வினை பற்றி எடுத்துரைக்கின்றார்.

அதில் ஒரு குறள்
ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்
என்பதாகும்.

இக்குறளின் பொருள் அனைவரும் அறிந்ததே.

ஊழ்வினை வலிமைமிக்கது. அது நமக்கு முன்பாகப் பயணித்து நமக்குரியதைச் செய்ய வல்லது.

இதிலிருந்து எவரும் தப்பித்துக் கொள்ள முடியாது. அதனாலன்றோ அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்று சிலப்பதிகாரம் பேசிற்று.

அறம் கூற்றாகும் என்பது ஊழ்வினையின் விளைபொருள் என்பதைச் சுட்டுவதாகும்.

எனினும் ஓர் உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும். ஊழ் என்பது நேர்க்கனியமாகவோ அன்றி எதிர்க்கனியமாகவோ இருக்க முடியும்.

எனினும் நடைமுறையில் ஊழ் என்பது மறைக் கனியமாகவே உணரப்படுவதால், ஊழ்வினை என்பதை பாவத்தின் திரட்சியாகப் பார்க்கின்ற வழமை நம்மிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் ஊழ்வினையைப் பார்ப்பதுதான் பொருத்தம் என்பது நம் தாழ்மையான கருத்து.

அதாவது ஊழ்வினை என்பதை நாம் செய்த தீவினையாகப் பார்ப்பதை அங்கீகரிப்பதானது மக்களை நல்வழிப்படுத்த உதவும்.

ஆகையால் ஊழ்வினை என்பது நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் செய்கின்ற பாவத்தின் அடிப்படையில் அளவீடு செய்யப்படுவதென எடுத்துக் கொள்ளலாம்.

இங்கு இவ்வாறு ஊழ்வினை பற்றிக் கூறுவதற்கான முக்கிய காரணம் நம் தமிழ் அரசியல்வாதிகள் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

ஆம், எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் செய்கின்ற விசமத்தனமான பிரசாரங்கள், கபடத்தனங்கள், ஏமாற்று நாடகங்கள், பசப்பு வார்த்தைகள், தம்மை நம்பி வருகின்ற மக்களை நம்பவைத்து நடுத்தெருவில் விடுகின்ற துரோகத்தனங்கள் என்பவற்றைத் தாராளமாகச் செய்கின்றார்கள்.

இதைப்பார்க்கும்போது இவர்கள் ஊழ்வினையின் வலிமையை உணராமல் செயலாற்றுகிறார்களே என்ற ஏக்கம் ஏற்படவே செய்கிறது.

அன்புக்குரிய தமிழ் அரசியல்வாதிகளே! நீங்கள் செய்கின்ற பொய்ப் பிரசாரங்கள், போலித்தனங்கள் எங்கள் மக்களை எத்துணை தூரம் பாதிக்கிறது.

ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகிறீர்கள். குற்றம் சாட்டுவதே உங்கள் தொழிலாயின் உங்களால் மக்களுக்கு எப்படி பணி செய்ய முடியும்.

ஆக, இருளைக் குறைகூறுவதற்குப் பதிலாக விளக்கை ஏற்றுங்கள். இருள், ஒளியில் மட்டுமே மறையும். குறைகூறுவதால் அது ஒருபோதும் தன்னிலையை மாற்றாது.

ஆகையால் நல்லதை நல்லதென்று கூறுவதனூடு மக்களின் மனங்களை வெல்லுங்கள். மக்கள் உங்களை நேசிக்கும்போது அன்பு, அறம் என அனைத்தையும் நீங்களாகவே பின்பற்றுவீர்கள்.

அப்போது ஊழ்வினைக்கு ஏது இடம்.

## பரமேஸ்வராச் சந்தியில் வாள்வெட்டு சந்தேகத்தில் இருவர் கைது இருவர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் வாள்வெட்டுக்கு இலக்காகியிருந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் அடிப்படையில் முன்பகை காரணமாகவே குறித்த வாள்வெட்டு வன்முறை இடம்பெற்றிருப்பதாகவும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நால்வரே குறித்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் இருவர் அவர்களின் வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் வாள்வெட்டுக்குப் பயன்படுத்தப்பட்டது என நம்பப்படும் வாள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஏனைய இருவரையும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## வட்டுக்கோட்டையில் இருவரிடம் வழிப்பறி

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செட்டியார் மடம் சந்தி மற்றும் யாழ்ப்பாண கல்லூரியின் பின்வீதி பகுதிகளில் வைத்து இருவரிடம் வழிப்பறிக் கொள்ளையர்கள் கைப்பைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த இருவரும் வீதியால் சென்று கொண்டிருந்தவேளையே முக்கிய ஆவணங்கள் உள்ளடங்கிய கைப்பைகள் கொள்ளையடித்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-104)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வழிபட வேண்டாம் அல்லது உருவ வழிபாடு வேண்டாம்

அரசியல்வாதிகளின் பித்துப்பிடித்து வழிபடுபவர்கள் சிலர். சுவர்கள் முழுவதும் சுவரொட்டியில் உள்ள தங்கள் கதாநாயகர்களை வழிபடும் குழந்தைகளைப் பாருங்கள்.

ஒருவர் மீது வைத்திருக்கும் பெரு விருப்பமே உங்களை அவருக்கு விசிறியாக்குகிறது. நீங்கள் பெரு விருப்பம் வைத்திருப்பவரிடம் அவர் நம்மைச் சேர்ந்தவர் என்ற உணர்வோடு இருப்பதும் தெய்வீகத்தைக் காண்பதும் உங்களைப் புனிதராக்குகிறது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் கந்தையா உபாத்தியார் சந்தி, கொத்தியாவத்தை, அட்டகிரி, ஆனைக்கோட்டை வி.சி. சாவற்காடு சந்தி குளப்பிட்டி வீதி, காக்கைதீவு, குளப்பிட்டி- ஆனைக்கோட்டை வீதி, நவாலி, வராகி கொக்குவில் மேற்படி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும். (நி-5)

## வடக்கில் மேலும் 9 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் மேலும் 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 7 தொற்றாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 2 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில், கிளிநொச்சி - உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலை ஊடாக பெறப்பட்டிருந்த மூவரின் மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மூவரும் உருத்திரபுரம் கிராமத்தில் உள்ள பராமரிப்பு இல்லம் ஒன்றில் பராமரிக்கப்பட்டு வரும் 14 வயது மாணவிகள் என தெரியவந்துள்ளது.

குறித்த மூன்று மாணவிகளுக்கும் கொரோனா நோய்த் தொற்று அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

## சீனத் தூதுக்குழுவினர் மன்னாருக்கு விஜயம்

(மன்னார்)

வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் நேற்று வியாழக்கிழமை மாலை மன்னார் மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர்களுக்கும் குறித்த வாழ்வாதார உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீனத் தூதுவர் மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர்களை சந்தித்தார்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு உணவுப் பொதிகள் மற்றும்வலைத் தொகுதிகளையும் வழங்கி வைத்தார்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் கடற்தொழிலாளர்களுக்கு மேற்படி பொருட்களை வழங்கிவைத்தார். இதன்போது மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.(ம-285)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

### அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்

உணவு உண்ணும் முறை- கிழக்கு நோக்கி உண்டால் ஆயுள் வளரும். மேற்கு நோக்கி உண்டால் பொருள் சேரும், தெற்கு நோக்கி உண்டால் புகழ் வளரும், வடக்கு நோக்கி உண்டால் நோய் வளரும்.

அன்னம், நெய், உப்பு மூன்றையும் கையால் படைக்கக் கூடாது.

யானையைப் போல குளிப்பாயாக, தேனீயைப் போல் உழைப்பாயாக. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சரவை மாற்றத்திற்கு பிரதமரும் பச்சைக்கொடி

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அமைச்சரவையில் சில மாற்றங்கள் இடம் பெறலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசிலுள்ள சில அமைச்சர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பல தரப்பினரும் கடந்த காலங்களில் முறைப்பாடுகளை முன்வைத்தனர். ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இது தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதங்களை அனுப்பி இருந்தனர்.

இந்நிலையில், அமைச்சுகளின் நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன, திட்டங்கள் உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா? என்பது தொடர்பிலும் ஜனாதிபதி ஆராய்ந்துள்ளார்.

அந்தக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையில் மறுசீரமைப்பு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சரவை மாற்றத்துக்கு ஆரம்பத்தில் அதிருப்தியை வெளியிட்டிருந்த பிரமர் மகிந்த ராஜபக்ஷவும் தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி)

## பூஸ்டர் பெறாவிட்டால் நாடு முடக்கப்படும்

### சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை உரிய காலப்பகுதிக்குள் பெறாவிட்டால் நாட்டில் நாளாந்தச் செயற்பாடுகள் மீண்டும் முடங்கக்கூடும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டில் தற்போது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. ஆனால், நாம் எதிர்பார்த்தளவு அதனைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் ஆர்வம் காட்டவில்லை.'

தற்போது வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு நாம் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்ததே காரணம்.

எனவே, இந்த நிலைமையைத் தக்க வைத்துக்கொள்வதற்கும், எதிர்காலத்தில் நாளா ந்த நடவடிக்கைகள் பாதிக்காமல் இருப்பதற்கும் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு கோருகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

## டொலர் தட்டுப்பாடு மூடப்படும் தூதரகங்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் டொலர்களுக்கான தட்டுப்பாடு காரணமாக அரசாங்கம் வெளிநாட்டு தூதரகங்கள் சிலவற்றை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

செலவுகளை கட்டுப்படுத்தி அதன் ஊடாக டொலர்களை சேமிப்பதற்காக இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியாவிற்கான இலங்கைத் தூதரகம், சைப்பிரஸ் மற்றும் பிராங்புருட் ஆகியனவற்றுக்கான கொன்சோல் காரியாலங்கள் மூடப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## மேலும் 4 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம்

(கொழும்பு)

கொவிட்-19 மாறுபாடான ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் நான்கு நோயாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார். (நி)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பொது அறிவித்தல்-2022

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள்/ தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**01. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் 2022**

இப்பிரதேச நிர்வாக எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை உரிய உப அலுவலகங்களில் பெற்று 31.03.2022 இற்கு முன்னர் 2022 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ளவும். 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**02. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் 2022**

1533/16 ஆம் இலக்க 25.01.2008 மற்றும் 1534/18 ஆம் இலக்க 01.02.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்டதற்கமைய தொழில் அல்லது வியாபாரத்தை பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை உரிய உபஅலுவலகத்தினூடாக கட்டாயமாக பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளல் வேண்டும்.

**03. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் புதிய கட்டுமானங்கள் அல்லது திருத்தங்கள், குழாய்க்கிணறு அமைத்தல் மற்றும் அனைத்து கொங்கிறீற் வேலைகளுக்கும் பிரதேசசபையின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும். மேலும் கட்டடம் அமைக்கப்படும் காணியின் 1/3 பகுதி கட்டாயமாக நிலப்பகுதியாக அமைதல் வேண்டும்.

**04. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல் 2022**

2022 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி (வளர்ப்பு நாய்கள்) உரிமங்களை 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**05. விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளில் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினை செலுத்தி அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியினை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய நிறுவனங்களின் விளம்பரங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும்.

**06. மரக்கறி, மீன், இறைச்சிவகை விற்பனை தடை செய்தல்'**

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து **01 Km** தூரத்திற்கு வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

**07. படவரைஞர் பதிவு செய்தல் /புதுப்பித்தல்**

2022ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே படவரைஞராக பதிவு செய்தவர்களும் 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்.

**08. பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படின் சுற்றாடல் பொலிஸ் மூலம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**09. கழிவகற்றல் சேவை**

தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி சபையின் கழிவகற்றும் வாகனங்கள் மூலம் அகற்றிக்கொள்ள முடியும். மேலும் கழிவுப்பொருட்களில் பிளாஸ்ரிக், கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்றவற்றினை வேறுபடுத்தி பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட இடத்தில் இடப்பட வேண்டும். உக்கும் கழிவுகளை தாங்களாகவே அகற்றிக் கொள்ளல் வேண்டும்.

**10. நீர் வழங்கல் சேவை**

பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளுக்கு குடிநீர் தேவைப்படின் பிரதேசசபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரை பெற்றுக்கொள்ள முடியும்.

**11. கனரக வாகன சேவைகள்**

பக்கோ, கலிபவுசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகள் பெறுவதற்கு, சபையில் சேவைக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**12. பொது சுகாதாரம் பேணுதல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்புரவு செய்து பொதுச் சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள் எதுவும் காணியில் இல்லாதொழிக்க வேண்டும்.

**13. சந்தை வியாபாரம் தொடர்பானது**

சந்தையில் உற்பத்திப் பொருட்களுக்காக எதுவித கழிவுகளும் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகை வரியானது **4%** இற்கு மேற்படலாகாது. சந்தைச் சுற்றாடல் பகுதியில் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நிறுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தரித்து விடப்படல் வேண்டும்.

**14. பொதுவழியின் பயன்பாட்டை இடையூறு செய்யும் வகையில் அலைந்து திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்தல்**

பொதுவழி மீது அல்லது பொது வழியின் அருகில் கால்நடைகளை கட்டுதல், அலைந்து திரிகின்ற வகையில் கால்நடைகளை விடுதல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான குற்றங்களுக்காக பிடிக்கப்படும் கால்நடைகளை பிடித்தல், பராமரித்தல் செலவுகளுக்காக சபையால் காலத்துக்கு காலம் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களை செலுத்த தவறின் அல்லது கால்நடைகளை உரிமைகோராது விடின் அவ்வாறான கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**15. டெங்குநோயை கட்டுப்படுத்தல்**

எமது பிரதேசத்தில் ஆட்கொல்லி நோயான டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்தும் ஓர் அங்கமாக சபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களை துப்புரவாக வைத்திருக்குமாறு அதன் உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். இதனை மீறும் ஆதனங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**16. ஒப்பந்தகாரரை பதிவு செய்தல்**

எமது சபையால் மேற்கொள்ளப்படும் கட்டுமான வேலைகளுக்கான ஒப்பந்தகாரரை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்கள் ரூபா 02 மில்லியன் தொகைக்கு உட்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் ரூபா 02 மில்லியனுக்கு தொகைக்கு மேற்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் எதிர்வரும் 31.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**17. பொலித்தீன் பாவனையை தடைசெய்தல்**

2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் நடைவண்டி மூலம் உணவு விற்பனையில் ஈடுபடுபவர்கள் மேற்படி வர்த்தமானி அறிவுறுத்தலை பின்பற்றுதல் வேண்டும்.

**சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**

(C-3268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 பேர்...

நிகழ்ந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,698 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வடக்கில்...

தென் கிழக்குப் பகுதியில் வங்கக் கடலில் தற்போது ஒரு தாழமுக்கம் உருவாகியுள்ளது.

இது கிழக்கு, வடகிழக்குத் திசையில் நகரும் வாய்ப்புள்ளது. இதனால், எதிர்வரும் 20ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பரவலாக மிதமானது முதல் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்திற்கு கனமழை கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (ம-18,33)

## யாழ்ப்பாணத்தில்...

டைய நபர் ஒருவருக்கே மலேரியாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தென்னாபிரிக்காவில் இருந்து இலங்கைக்கு வந்த குறித்த நபரே தொற்றுக்கு ஆளாகியிருக்கிறார்.

மலேரியா அற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ளபோதிலும், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களினால் மலேரியா பரவல் அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும் மலேரியா எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியா முன்னெச்சரிக்கை மருத்துவ வழிகாட்டுதல்களைத் தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லுமாறும் யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியாத் தடுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார். (ம-18,33,104)

## 'பனை' தொடர்...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் மற்றும் தூதரக அதிகாரிகள் நேற்றுக் காலை 8 மணியளவில் அரியாலை கடலட்டை பண்ணைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தனர்.

இதன்போது கடலட்டை பண்ணையில் ஒரு சுவாரஸ்யமான சம்பவமொன்று பதிவானது.

அங்கு நின்ற பனை மரத்தினை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதுதான் "பல்மேறா" என தெரிவித்தபோது சீனத் தூதுவர் பனைமரம் தொடர்பில் வினவினார்.

இதில் ரொடி (கள்) கிடைக்கும். அற்ககோல் என சைகை மூலம் காண்பித்து இது உடம்புக்கு கேடு விளைவிக்காது என விளங்கப்படுத்தியபோது தூதுவர் அதற்கு ஹா ஹா என சிரித்தார். இதன்போது அங்கிருந்தவர்களும் சிரித்த சம்பவம் ஒன்றும் இடம்பெற்றது. (ம-18,33)

## 15 ஆண்டுகள்...

மேல் நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த தேவராசா சிவபாலன் (வயது - 45) என்பவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஆயுதங்களை கொழும்புக்கு கடத்தி வந்தார் எனும் குற்றச்சாட்டில், வத்தளை பகுதியில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதன்பின் 2 வருட கால விசாரணைகளின் பின்னர், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கொழும்பு நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளுக்காக கடந்த 15 ஆண்டு காலமாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்.

இந்நிலையில் கடந்த 14ஆம் திகதி அவருக்கு எதிரான வழக்கில் அவரை நிரபராதி என கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்தது.

இதேவேளை அவரது மகளுக்கு ஒரு வயதும் நிரம்பாத நிலையில், அவர் கைது செய்யப்பட்டு, தற்போது அவர் விடுவிக்கப்பட்டதும் தனது மகளை 15 வருடங்களின் பின் கண்டு நெகிழ்ச்சியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-33)

## வெளிவிவகார...

பாக்லே.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நேற்று வெளிவிவகார அமைச்சில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து பேசப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும் பரஸ்பர ஒத்துழைப்பு சார்ந்த விடயங்கள் மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அண்மைய இந்திய விஜயத்தின் விளைவுகள் தொடர்பான விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடியதாகவும் வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 2022இல்...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் மார்ச்சில் ஆரம்பமாகின்றது. இலங்கை தொடர்பில் இம்முறை கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றே எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சர்வதேசத்துடன் நல்லுறவைப் பேணவில்லை. மனித உரிமைகளை மீறும் 45 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

2022ஆம் ஆண்டு என்பது தீர்க்கமான வருடமாக அமையும். பல மாற்றங்கள் இடம்பெறும். ஆட்சி மாற்றம்கூட ஏற்படும்" என்றார். (ம)

## யாழ். மக்களு...

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நல்லுறவு நிலவி வருகின்றது.

அதன் ஒரு அங்கமாகவே சீன தூதரகமானதுயாழ்பாண மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது.

இந்த நிகழ்வானது சீனா மற்றும் வடக்கு மக்களிடையே நல்லுறவை மேம்படுத்தும்.

குறிப்பாக சீன தூதரகமானது இலங்கைக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றது.

கடந்த இரண்டு வருடங்களாக உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த கொரோனா வைரஸ் தாக்கத்தின்போது சீனா இலங்கைக்கு பெருமளவில் உதவிகளை வழங்கியுள்ளது என்றார். (ம-18,33)

## பயங்...

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் தாம் கைது செய்யப்பட்டமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் முன்வைத்த முறைப்பாட்டை ஆராய்ந்த சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம், அடையாளப்படுத்தப்படாத சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்கு பிடியாணை இன்றி கைது நடவடிக்கைகளுக்கு வழிவகுப்பதாகவும், அதிகாரிகள் சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் 18 மாதங்கள் தடுத்து வைப்பதற்கும் வழிவகுக்கின்றது.

எனவே, இந்த சட்டத்தை இரத்து செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. (ம)

## நாட்டை...

அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பொதுமக்கள், தங்கள் குறைகளுக்கு புதிய வழியையும் தீர்வுகளையும் தேட ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டின் இளைஞர்கள், தொழிலதிபர்கள், தொழில் வல்லுநர்கள், கிராமப்புற மக்கள் மற்றும் அனைத்து சமூகத்தினருக்கும் நம்பிக்கையை ஊட்டுவதில் கட்சி கவனம் செலுத்தும் என்றும், இதற்காக குடிமக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார். (ம)


தன நிதானய
திகதி - 2021.12.16
சீட்டிழுப்பு இலக்கம் - 648
G 16 44 50 62

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2913
Q 03 13 25 76

மஹஜன சம்பத
திகதி 2021/12/16
சீட்டிழுப்பு இலக்கம் 4618
Q 6 2 8 4 1 0

மெகா பவர்
திகதி 16/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0966
D 21 44 46 50 79

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1183
மிதுனம் 1 3 9 3 6 8

நாகபூஷணி அருளுடன்
15.12.2021 அன்று சீட்டிழுப்பில் (லொத்தர்)
NLB மஹஜன சம்பத 4617ஆவது 1 லட்சம்
DLB சசிரி 110ஆவது 1 லட்சம்
வெல்லப்பட்டுள்ளது
யாழ்.முகவர் கனகலிங்கம் திலகவதி
K.K.S வீதி, யாழ்ப்பாணம். (9099)

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1421
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,367,680
06 34 50 65 G

சனீதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3756
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 16.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,694,860
18 32 49 64 N

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 16.12.2021
வெற்றி வாரம்: 3307
வர்ணம்: கபில நிறம்
26 33 54 57 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 11,914,360/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1595 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 16/12/2021 தினம் வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் 75,098,450/=
I 14 28 49 76

திகதி: 2021-12-16
வெற்றி வாரம்: 468 வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,675,320/-
G 41 20 14 3
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,454,320/-
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 11,799,584/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள K.M.V.R - ஆயுர்வேத மருந்து & பான்சி கடைக்கு வேலையாட்கள் உடன் தேவை.

**076 913 2049/ 077 292 0394**

K.M.V.R - ஆயுர்வேத மருந்து & பான்சி கடை, K.K.S வீதி, மாவிட்டபுரம். (C-3274)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கனக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9104)

தொடர்புகளுக்கு

**077 814 7389, 070 705 1655**


# நண்பியை மிரட்டுவதற்காக கழுத்தில் கயிறு போட்டவர் மரணம்

## நாச்சிமார் கோவிலடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தனது பெண் நண்பியை மிரட்டுவதற்காக கழுத்தில் கயிறு போட்டு நேரலை காணொளியில் காண்பித்த இளைஞன் கயிறு இறுகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் நாச்சிமார் வீதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வீரசிங்கம் ஸ்ரான்லின் ஜெயசிங்கம் (வயது -31) என்ற இளைஞன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அச்சகம் ஒன்றில் பணியாற்றி வருகிறார்.

அவர் தான் தங்கியிருக்கும் அறையில் கதிரையில் ஏறி கூரை மரத்தில் கயிற்றைப் போட்டு கழுத்தில் சுருக்கிட்டு தனது பெண் நண்பிக்கு நேரலை காணொளி அழைப்பை எடுத்து மிரட்டியுள்ளார்.

எனினும் கதிரை சரிந்ததால் நிலை தடுமாறிய இளைஞனின் கழுத்தில் கயிறு இறுகியதால் அவரது உயிர் பிரிந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-33)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9095)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(Lanka Farm அருகாமையில்)

11/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். (9105)

**077 658 5999**
**077 623 4204**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மயிலிட்டி B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (9106)

**076 890 9259**
**077 015 0353**

## மோட்டார் சைக்கிள் தேவை

சைனா லான்சர் மோட்டார் சைக்கிள் தேவை. (9107)

**077 623 7956**

## 2022 ஆம் ஆண்டுக்கான Desk Diary - 140/=

பேப்பர் கவுஸ்

இல.300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-3270)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS (C-3237)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3215)

0768226240 DHL


# மரண அறிவித்தல்

## இலட்சுமி தனிநாயகம்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் விநாயகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி தனிநாயகம் அவர்கள் நேற்று (16.12.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான அம்பலவாணர் - கற்பகம் ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற தனிநாயகம் (முன்னாள் அதிபர்) அவர்களின் அன்புத் துணைவியாரும் கோபாலசிங்கம், குணசிங்கம், தருமரட்ணம், கோவிந்தபிள்ளை, குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைச்செல்வி, காலஞ்சென்ற கலைச்செல்வன், அருட்செல்வி, தமிழ்ச் செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியசீலன், தயாகரன், புவிநாயகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான குமாரவேலு, மருதலிங்கம் மற்றும் தருமரட்ணம், மயில்வாகனம்,- வரதராசா, அமிர்தலிங்கம், பேரம்பலம், புண்ணியமூர்த்தி, ஜெயலட்சுமி, வேதநாயகி, காலஞ்சென்ற கனகேஸ்வரி, கோமளம், நல்லம்மா, காலஞ்சென்ற தருமலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் செந்தூரன், ஜோஜிதா, காலஞ்சென்ற ஆரூரன், ஆரண்யன், சுடரோன், கலைச்சுடர், கதிரவன், கனிவிழி, பிரணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரபி, அஸ்விகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் விநாயகபுரம் இல்லத்தில் இன்று (17.12.2021) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பாலியாறு இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விநாயகபுரம்,
மல்லாவி. (C-3275)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.